# வீணைமீட்டும் விஞ்ஞானி
# ஸ்ரீமதி. எஸ். ருக்மிணி கோபாலகிருஷ்ணன்

காயகசிகாமணி ஹரிகேசநல்லூர் டோக்டர் முத்தையா பாகவதர் அவர்களுடைய பேத்தியும் காயகரத்னம் ஸ்ரீ நெல்லை கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய சகோதரியின் மகளுமான ஸ்ரீமதி ருக்மிணி கோபாலகிருஷ்ணன், பி.வி.ஸ்ரீநிவாசய்யர் - பி.வி.லக்ஷ்மி அம்மாள் தம்பதியரின் இரண்டாவது மகளாக திருநெல்வேலியில் (நெல்லை மாவட்டம்) 1936 ஆகஸ்ட் 24-ம் தேதி பிறந்தார்.

5-வது வயதில் தாய்மாமாவான ஸ்ரீ நெல்லை கிருஷ்ணமூர்த்தியிடம் இருந்து சங்கீதம் கற்றார், 1949-ம் ஆண்டில் சுவாதிதிருநாள் சங்கீத அகாடமியில் வாய்ப்பாட்டு கானபூஷணம் படித்துக் கொண்டிருக்கும் பொழுது, இரண்டாவது வருடம் பொதுத்தேர்வில் சப்சிடரி வீணை போட்டியில், மந்தரதாரரெ என்ற காம்போஜி கீதம் வாசித்து வாய்ப்பாட்டைப்போலவே வீணையிலும் அவரது திறமையை வெளிப்படுத்தினார். அதைக்கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த முசிரி சுப்பிரமணிய அய்யர் அன்றைய தலைமை ஆசிரியரான ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யரிடம், இந்தக் குழந்தை புகழ்பெற்ற ஒரு வீணை விதூஷியாக வருவதற்கான திறமையும், நாட்டமும் உள்ளதால் டபிள் பிரமோஷன் கொடுத்து ஐந்தாம் வருட வீணை மெயினுக்கு மாற்றவேண்டும் என்று சிபாரிசு செய்தார். மேற்கூறிய கலைக்கல்லூரியில் இப்படியொரு வெகுமதி கிடைத்த ஒரே மாணவி ஸ்ரீமதி ருக்மிணி கோபாலகிருஷ்ணன் ஆவார்.

ஒரு நாளில் குறைந்தது 18 மணிக்கூர் நேரமாவது வரிசைகளும் மற்று பாடங்களும் பரிசீலனை செய்து வந்தார். 1954 ல் இந்தியாவில் முதன் முறையாக ஆகாசவாணி நிலையம் நடத்திய போட்டியில் வெற்றிபெற்றதோடு இந்தியாவின் முதன் குடியரசுத் தலைவரான ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் அவர்களிடமிருந்து அவார்டும் பெற்றார்.

1954 ல் முதலாவது கல்ச்சரல் ஸ்கோளர்ஷிப் கிடைக்கப்பெற்ற மாணவியானார். பத்மபூஷண் ஸ்ரீ.கெ.நாராயணஸ்வாமி அய்யரிடம் தொடர்ந்து படிப்பதற்கான பாக்கியத்தையும் பெற்றார். சென்னையில் வைத்து நடந்த இந்த ஸ்கோளர்ஷிப் போட்டியில் பங்கேற்பதற்கு ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யருடன் தான் ஸ்ரீமதி ருக்மிணி கோபாலகிருஷ்ணன் சென்றார்.

அந்த நேரத்தில் ஸ்ரீமதி ருக்மிணி கோபாலகிருஷ்ணனுக்கு மற்றுமொரு மறக்கமுடியாத சௌபாக்கியமும் கிடைத்தது. ஸ்ரீ ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யருக்கு ஏராளமான கச்சேரிகள் இருந்ததால் ஸ்ரீமதி ருக்மிணி டீச்சரை இந்தியாவின் கானகோகிலம் என்று போற்றப்படும் ஸ்ரீமதி எம்.எஸ். சுப்பலெக்ஷ்மி அவர்களின் இல்லத்தில் பத்துநாட்கள் தங்கைவைத்தார். தோடி, பைரவி, காம்போஜி போன்ற ராகங்களை ஆலாபனமும் சாதகம் செய்யும் முறையும் கேட்டுத் தெரிந்துகொண்ட எம்.எஸ்.சுப்பலெக்ஷ்மி அவர்கள், ருக்மிணியை ஆசீர்வதித்தும், பஜகோவிந்தம் என்ற கிருதியை ஆலபிக்க பயிற்சியும் கொடுத்தார். அந்த நாட்கள் வாழ்நாளில் மறக்கமுடியாத நாட்கள் என்று ருக்மிணி டீச்சர் கூறுவார்.

18-வது வயதில் ஸ்ரீ சுவாதிதிருநாள் சங்கீதக் கல்லூரியில் ஆசிரியராக வேலை கிடைத்தது. அதே கல்லூரியில் துணை பேராசிரியராகவும், துரை மேதாவியாகவும் பணியாற்றினார். ஸ்ரீமதி ருக்மிணி டீச்சர் முதலாவதாக டில்லி தமிழ் சங்கத்தில் கச்சேரி நடத்தினார். அந்த கச்சேரியில் அவரது இசை திறமையின் பயனாக ஏராளம் சபைகளில் அவர் வரவேற்கப்பட்டார். சென்னை மியூசிக் அகாடமியில் டிசம்பர் சீசன் மாலைநேரக் கச்சேரிக்கு அழைக்கப்பட்டு, அங்கே அசாதாரணாக அவர் ‘தானம்’ வாசிச்சதால் ‘தானராணி’ என்ற பட்டமும் அளிக்கப்பட்டது. அப்போதைய பிரசித்தபெற்ற இசை வல்லுனர்களான ஸ்ரீ முசிறி சுப்பிரமணிய அய்யர், ஸ்ரீ மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர் போன்றவர்கள் டீச்சர் ராகங்களை கையாளும் முறையையும், அசாதாரணமாக பல ராகங்களில் ‘தானம்’ வாசிப்பதையும் மிகவும் மெச்சியதுடன் அவர்களுடைய ஆசிகளையும் வழங்கினார்கள். All India Radio (AIR) ஆகாசவாணியின் திருவனந்தபுரம் லோக்கல் ஆடிஷன் செயர்பேர்சனாகவும் M.A.B.A. New Delhi போர்டு மெம்பராகவும் பணியாற்றினார். கல்லூரி ஆசிரியர்களுக்காக காரியவட்டம் பல்கலைக்கழகம் திருவனந்தபுரத்தில் நடத்திய ரிஃப்ரஷர் கோர்ஸில் ரிசோர்ஸ் பேர்சன் ஆகவும், ‘சாதனா’ ஆசிரியர்களுக்கான வகுப்பு எடுப்பதற்காக ஆர்.எல்.வி. கல்லூரி, திருப்பணித்துறை, திருவனந்புரம் சுவாதி சங்கீதக் கல்லூரி, செம்பை மெம்மோரியல் கல்லூரி பாலக்காடு முதலான இடங்களில் பலமுறை அழைக்கப்பட்டார். காலிக்கட் பல்கலைக் கழகத்தினுடைய Board of Studies மெம்பராக பணியமர்த்தப்படுள்ளார்.

கிடைக்கப்பெற்ற வெகுமதிகள்

1. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் அவார்டு 1954
2. செம்பை மெம்மோரியல் சபை அவார்டு 2000
3. கெ.எஸ்.நாராயணஸ்வாமி சங்கீத ரத்ன அவார்டு 2001
4. ஆதிசங்கர வேதவேதாந்த சம்ஸ்கிருத கோ-ஆப்பரேஷன் எடுக்கேஷன் சொசைட்டி அவார்டு 2006
5. குருபூஜை அவார்டு 2008
6. கேரள சங்கீதநாடக அகாடமி ஃபெல்லோஷிப் கலாரத்ன அவார்டு 2015
7. வீணைமீட்டும் விஞ்ஞானி - டில்லி 2008
8. ஸ்ரீபத்மபூஷண், கெ.எஸ்.நாராயணஸ்வாமி அவர்கள் அவார்டு - ஷண்முகானந்த மும்பை 2022
9. சங்கீதரத்ன அவார்டு - பத்மபூஷண் கெ.எஸ்.நாராயணஸ்வாமி அவர்கள் - திருவனந்தபுரம் 2023.

திருவனந்தபுரம் "பாஷா இன்ஸ்டிட்யூட்" வழியாக வீணா போதினி (ஏராளம் வர்ணங்களும் கிருதிகளும்) பிரசுரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஒன்றாம் வால்யூம் | - | வர்ணமாலிகா, 44 வர்ணங்கள் |
| இரண்டாம் வால்யூம் | - | 50 கீர்த்தனங்கள் (அர்த்தத்துடன்) |
| மூன்றாம் வால்யூம் | - | 50 கீர்த்தனங்கள் அதில் பஞ்சரத்ன கிருதிகள் நவக்கிரஹ கிருதிகள் |

நான்காம் வால்யூம் - 70 கீர்த்தனங்கள், அதில் அருணாசலகவிராயர் முதலானவர்களின் தமிழ் கிருதிகளும் உள்படுத்தப்பட்டது.

2014 ல் பத்மபூஷண் சங்கீதகலாநிதி ஸ்ரீ கெ.எஸ்.நாராயண ஸ்வாமி அவர்களுடைய பிறந்த நாளை ஒட்டி வீணை சங்கீதசங், கெ.எஸ்.நாராயண ஸ்வாமி சங்கீதரத்ன வெகுமதியளித்து ஆதரிக்கப்பட்டார். 2015 ல் கலாரத்னா அவார்டு (ஃபெல்லோஷிப்) அளித்து கேரள சங்கீத நாடக அகாடமியால் ஆதரிக்கப்பட்டார்.

ஸ்ரீ சித்திரைத் திருநாள் நாட்டிய கலாகேந்திரம் பிரசுரிக்கும் நினைவுமலர்களில் தொடர்ந்து நவவிதபக்தி, குருபிரணாமம், குருசிஷ்யபந்தம், அத்யாபனவிருத்தி, சங்கீதமும் நவக்கிரஹங்களும், சிரேஷ்டரான குருநாதன்,

கமகங்கள், புரந்தரதாஸர் கிருதிகள் போன்ற ஏராளமான படைப்புகள் பிரசுரிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், வைணிக வித்வான் சங்கீதகலாநிதி பத்மபூஷண் ஸ்ரீ கெ.எஸ்.நாராயண ஸ்வாமி நவவித பக்தி, தியாகராஜ கீர்த்தனங்கள், சங்கீதத்தின் அபௌமமாய சக்தி, சங்கீத தேவதையான சரஸ்வதி, சங்கீதகல ஒரு தபஸ்ய, சங்கீதம் ராஷ்டிரத்தின் அக்ஷயமாய மூலதனம், ஸ்ரீ அன்னமாசார்யா, பக்தியில் சிரேஷ்டமானது எது, சங்கீதமும் நவக்கிரஹங்களும், வீணை வாசிக்கும்பொழுது கவனிக்கவேண்டிய விஷயங்கள், ஸ்ரீ நாமதேவர் போன்ற படைப்புக்களை பற்பல நினைவுமலர்கள் வழியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.

புது டில்லி கொல்கத்தா ரசிகரஞ்சனி சபை, சரஸ்வதிஹால்-சென்னை, நாரதகான சபை-சென்னை, ஆராதனை சபை - திருவனந்தபுரம், சுவாதிதிருநாள் சங்கீத சபை- திருவனந்தபுரம், சங்கீதசபை - பாலக்காடு மற்றும் நவராத்திரி நாட்களிலும், திருவிழா நாட்களிலும் பற்பல கோவில்களில் கச்சேரிகளும் நடத்தியுள்ளார்.

பெங்களூரில் வைத்து நடத்தப்பட்ட ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் ஆர்ட் ஆஃப் லிவிங் சில்வர் ஜூபிலி கொண்டாட்டத்தில் 3800 வீணை மீட்டுபவர்கள் பங்கேற்ற சிம்ஃபணியில் கேரளத்திலிருந்து முன்வரிசையில் இடம்கொடுத்து கௌரவிக்கப்பட்டவராவார் ஸ்ரீமதி ருக்மிணி டீச்சர். அதுபோன்று 2006 நவம்பர் 28 முதல் டிசம்பர் 1 வரை எர்ணாகுளம் ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தில் “புனர்நவ” ஸில்வர் ஜூபிலி கொண்டாட்டத்தில் 250 வீணை வித்வான்கள் பங்கேற்ற சிம்ஃபணிக்கு தலைமை வகித்து, ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரால் பொன்னாடை அணிவித்து ஆதரிக்கப்படவும் செய்தார்.

திருவனந்தபுரம் தூரதர்சன் ஆரம்பித்த காலத்தில் முதலாவதாக அதில் வீணைக்கச்சேரி நடத்தியவர் ஸ்ரீமதி ருக்மிணி டீச்சர் ஆவார். திருவனந்தபுரம் ஆகாசவாணியில் 70 வருடங்களாக ராகம்தானம்பல்லவி என்ற நேஷனல் புரோகிராம் மட்டுமின்றி அனேகம் சங்கீத கச்சேரிகளும் நடத்திவருகிறார். சென்னை, திருவனந்தபுரம் தூரதர்சன் கேந்திரங்களில் தேசீய அளவிலான நிகழ்ச்சிகளும் நடத்தியுள்ளார்.

அம்ருதா டிவியில் ஸ்ரீ.அஜித் நம்பூதிரி நடத்திவந்த “ஸ்ருதிலயம்” என்ற நிகழ்ச்சியும், ஸ்ரீ.கிருஷ்ணசந்திரன் நடத்திய முத்தையா பாகவதர் “ஜன்மதின ஸ்மரணா” (பிறந்தநாள் ஞாபகம்) என்ற நிகழிச்சியில் ஸ்ரீமதி ருக்மிணி டீச்சருடன் டோக்டர்.கெ.ஜெயலெக்ஷ்மியும், ஸ்ரீமதி சரஸ்வதி சங்கரும்

முத்தையா பாகவதரைப்பற்றி பேசியதுடன் கீர்த்தனைகளும் பாடினார்கள். கைரளி டிவியில் "ராகோத்ஸவம்" என்ற நிகழ்ச்சியிலும் ஏராளம் எப்பிசோடுகளில் ராகமும் தானமும் நடத்தியுள்ளார். சூர்யா டிவியில் "ஸ்வரசுதா" என்ற நிகழ்ச்சியில் கச்சேரி நடத்தியிருக்கிறார். கேரளா அரசு திருவனந்தபுரத்தில் வைத்து நடத்திய "மானவீயம்" என்ற நிகழ்ச்சியிலும் கச்சேரி நடத்தியுள்ளார். பத்மநாபஸ்வாமி கோவிலில் சுவாதி நாடகசாலையில் கச்சேரி நடத்தியுள்ளார். திருவனந்தபுரம் சுவாதி திருநாள் இசைக் கல்லூரி, பாலக்காடு செம்பை மெம்மோரியல் இசைக்கல்லூரிகளில் 35 வருடம் பணியாற்றிய பிறகு கணவரின் உடல்நிலை சரியில்லாததால் செம்பை மெம்மோரியல் இசைக்கல்லூரியிலிருந்து தானாகவே பணியிலிருந்து விடுதல்பெற்றார்.

2001 ல் முதலாவது ஸ்வரலய கூட்டத்தின் அவார்டு கமிட்டியில் ஸ்ரீ.ஒ.என்.வி.குருப்பு, ஸ்ரீ.ராஜ்மோகன் போன்றவர்களுடன் சங்கீதமேதை (ஜூரி மெம்பர்) என்ற முக்கியமான பொறுப்பை ஏற்று பின்னணி பாடகரான ஸ்ரீ.பி.ஜயசந்திரன் அவர்களுக்கு பிரஸ்கிளப்பில் அவார்டு நிர்ணயமும் செய்தார்.

சீடர்கள்

பிரசித்தமான கவிதை எழுத்தாளர் ஸ்ரீமதி சுகதகுமாரி, பி. லெக்ஷ்மி (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை, ஆர்.எல்.வி.கல்லூரி), எஸ்.பாலாம்பாள் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியை, எஸ்.எஸ்.டி.சி) ஸ்ரீமதி ஜயலெக்ஷ்மி ஸ்ரீனிவாஸன் (ஓய்வுபெற்ற பேராசிரியர், எஸ்.எஸ்.டி.சி), ஸ்ரீமதி சந்தியா.பி. (ரிசர்வ் வங்கி அதிகாரி) ஸ்ரீமதி டோக்டர் ரீத்தா விஜயன், ஸ்ரீமதி டோக்டர் ஜகதம்பிகா (சைக்காட்ரி), ஸ்ரீமதி டோக்டர் பாலஸ்ரீதேவி (கைனகோளஜிஸ்ட்), ஸ்ரீமதி காயத்ரி (இன்ஜினீயர்), Mr.Geets USA, Mr.Tukkar USA, Mr.Nacha Spain, ஸ்ரீமதி. பிரியா, ஸ்ரீமதி பிந்து, குமாரி ஸ்ரீமதி MBBS Student, ஸ்ரீ. ராம்குமார் (ரீஜியணல் மியூசிக் மானேஜர், ரெட் எஃப்.எம்), ஸ்ரீமதி பூர்ணிமா (அசிஸ்டன்ட் பிரட்யூசர், ரேடியோ மாங்கோ), ஸ்ரீமதி. நிஷா பொன்னி (லக்சரர், எஸ்.எஸ்.டி.சி), டோக்டர் கெ. ஜெயலெக்ஷ்மி (Rtd. HOD of Music, Maharajas College), ஸ்ரீமதி சரஸ்வதி சங்கர் (பின்னணி பாடகர்) ஸ்ரீமதி.ஜெஸ்டின் ஜோண், ஸ்ரீமதி சித்ரா எர்ணாகுளம், ஸ்ரீமதி சந்தியா டிஜிபி, ஸ்ரீ.அருண் கிருஷ்ணா (பேராசிரியர், கலாமண்டலம்)